1975 நவம்பர் 10]

தரப்படுகின்ற சத்துணவுதான் 20 வயதுவரை வளம் தரும். அதுவும் 20 வயதுக்குள் தரும் வளம்தான் 60 வயதுவரை ஊட்டத்தைத் தரும். ஆகவே, திரு. சுரேந்திரன் இனி குழந்தை யாக முடியாது.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், இந்த 'மெட்ராஸ் ஐ' என்பது பரவ ஆரம்பித்து, அது 'எபிடமிக்' மாதிரி பரவியது. அது முழுமையாக மாநிலத்தில் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, இரண்டு நாட்களுக்கு முன்னால் அதுபற்றி அவையிலே நான் தனியாக விளக்கம் தந்தேன். பெரும்பாலும் நின்று விட்டது. காற்று அடிக்கிற வகையிலே வந்தது, மறுபடி எந்தக் காற்று அடித்ததோ, போய் இருக்கிறது.

மாதர்பாக்கம் மருத்துவ மனைக் கட்டடம்.

*251 வினா—**திரு. கா. வேழவேந்தன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) செங்கற்பட்டு மாவட்டம், பாதிரிவேடு மாதர்பாக்கம் அரசினர் மருத்துவ மனைக்குரிய புதிய கட்டடம் கட்டித்தரும் செயற்குறிப்பு ஆய்வில் உள்ளதா?

(இ) ஆம் எனில், இது எப்போது நிறைவேறும்?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ & இ) இதுபற்றிச் சுகாதாரம், குடும்பக் கட்டுப்பாடு இயக்குநரின் ஆய்வு மேற் கொள்ளப்பட்டிருக்கிறது.

திரு. கா. வேழவேந்தன்: தலைவரவர்களே, மேற்கண்ட ஊரில் அரசினர் மருத்துவமனைக்குரிய கட்டிடம் கட்ட ஊர் மக்களே சேர்ந்து அமைச்சரிடம் நேரில் ஒரு பகுதி நிதியைத் தந்திருக்கிறார்கள். ஆகவே, அந்தத் தொகை அரசாங்கத்திற்கு வந்திருக்கிறது. இதற்கு விரைவாக முன்னுரிமை கொடுத்து அந்த ஊரிலே அரசாங்க மருத்துவ மனைக்கான கட்டிடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா? ஏனென்றால் அங்கே ஏராளமான

நோயாளிகள் வருவதால் நெருக்கடியாக இருக்கிறது. எனவே உரிய நடவடிக்கைகள் விரைந்து எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, இது இரண்டு மூன்று வகையான நெருக்கடி நேரம். மருத்துவ மனைகளிலே வரும் எண்ணிக்கை அதிகம். அதிலும் ஒரு நெருக்கடி. நிதி நெருக்கடி இன்னொரு பக்கம். 25,000 ரூபாய் நிதி கிடைத்தது. நன்கொடையாக அவர்கள் அளித்த அந்த நிதி போதாது. அதேபோல இடமும் போதுமானதாக இல்லை. நிலம் சம்பந்தமாக மாவட்ட ஆட்சித் தலைவருக்குத் தெரிவிககப் பட்டிருக்கிறது. அந்த இடமும் கிடைத்த பிறகு, இந்த நிதியை அதிகப்படுத்தி கட்டடத்தைத் துவக்க முயற்சிக்கப்படும்.

குடிநீர் வழங்கு திட்டங்கள்

*252 வினா—திரு. ஏ. பாலையா: மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், கல்லுக்கூட்டம் குடிதண்ணீர்த் திட்டத்தை நிறைவேற்ற எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் கல்லுக்கூட்டம், திங்கள் சந்தை மற்றும் நெய்யூர் பேரூராட்சிகளுக்குக் கூட்டுக் குடிநீர் வழங்கும் திட்டத்திற்காக ஆய்வு மதிப்பீடு ஒன்றுக்கு 17—10—74 அன்று ஒப்புதலளித்தது. மேல் குறிப்பிட்ட மூன்று பேரூராட்சிகளும் அவரவர்களின் விகிதாசார ஆய்வுத்தொகை முழுவதையும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்குச் செலுத்தியுள்ளார்கள். மேற்படி திட்டத்திற்கான ஆய்வு வேலைகள் 1975 ஏப்ரல் முதல் வாரத்தில் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. ஆய்வு வேலைகள் முடிவடைந்தவுடன் இப்பேரூராட்சிகளின் குடிநீர்த் திட்டத்திற்கான உத்தேச மதிப்பீடு தயார் செய்யப்படும்.

*253 வினா—திரு. சீ. க. வடிவேலு: மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி வட்டம், மேட்டுப்பாளையம், தாத்தையங்கார்பேட்டை ஆகிய பேரூராட்சி